Koperasi Kebangsaan Permodalan Tanah Berhad
National Land Finance Co-operative Society Limited
தேசிய நில நிதி கூட்டுறவு சங்கம் லிமிடெட்
Talipon: 22731250
Cable: "NALFIN"
Fax: 03-22740826
Level 10, Wisma Tun Sambanthan, Jalan Sulaiman, Peti Surat 12133, 50768 Kuala Lumpur, Malaysia.



# தான்ஸ்ரீ சோமா புத்தகப் பரிசு

## 10,000 அமெரிக்க டாலர் (இந்திய ரூபாய் 5,00,000)

**தேசிய நிலநிதிக் கூட்டுறவு சங்கம்**

காலனிய ஆட்சிக்குப் பிறகு 1960-ஆம் ஆண்டில் மலேசியாவில் ஐரோப்பிய முதலாளிமார்கள் பெரிய தோட்டங்களைத் துண்டாடி தாங்களே விற்க முனைந்தனர். இதனால், இதுகாறும் இந்தத் தோட்டங்களில் வேலை செய்து வந்த தமிழர்கள் வேலை இழந்து வீதிக்கு வரவேண்டிய நிலை ஏற்பட்டது. உண்மையில், இது மலேசியத் தமிழர்களின் வாழ்வியலில் பெரும் சவாலாக அமைந்தது.

இந்த அவலநிலையைப் போக்கும் வகையில், அமைச்சர் துன் வீ.தி. சம்பந்தன் அவர்கள் கூட்டுறவு முறையில் தோட்டங்கள் வாங்கும் முயற்சியில் இறங்கினார். இதற்காக பத்து வெள்ளி பங்கு பணமாக தோட்ட மக்கள் செலுத்தி கூட்டுறவில் அங்கம் பெறும் வண்ணம் தேசிய நில நிதிக் கூட்டுறவு சங்கத்தை அமைத்தார். இந்த கூட்டுறவு சங்கத்தின் வெற்றியாக புக்கிட் சீடிம் தோட்டத்தை முதலில் வாங்கினார்கள். இதற்கு முழு முயற்சி செய்து வெற்றி பெற செய்வதற்கு பணியாற்றியது அந்த தோட்டத்தில் நிர்வாகியாக இருந்த தான்ஸ்ரீ கே.ஆர். சோமசுந்தரம் ஆவார். பின்னர், தேசிய நில நிதிக் கூட்டுறவு சங்கம் படிப்படியாக 19 தோட்டங்களை வாங்கியது. அதே வேளையில் பல துறைகளிலும் வணிகத்தில் கூட்டுறவு சங்கம் ஈடுபட்டு வெற்றி பெற்றது. தொடக்கக் காலம் முதல் தான்ஸ்ரீ சோமசுந்தரம் அவர்கள் தலைமை நிர்வாகியாக பொறுப்பேற்று திறம்பட இந்நிறுவனத்தை வழிநடத்தி இன்று அதன் தலைவராக இருந்து வருகிறார்.

தற்பொழுது டத்தோ. சகாதேவன் தலைமை நிர்வாகியாக பொறுப்பேற்று தான்ஸ்ரீ சோமசுந்தரம் அவர்களின் வெற்றிப் பணியை தொடர்ந்து வருகிறார். தேசிய நில நிதிக் கூட்டுறவு சங்கத்தின் நிர்வாகம் இன்று தமிழ் மொழிக்கும் இலக்கியத்திற்கும் ஊக்குவிப்பு வழங்கும் வண்ணம் தான்ஸ்ரீ சோமசுந்தரம் இலக்கிய அறவாரியத்தை அமைந்துள்ளது. இக்கூட்டுறவில் புதிய திட்டமாக தற்பொழுது அனைத்துலக தான்ஸ்ரீ சோமா புத்தகப் பரிசினை வழங்க திட்டம் வகுத்துள்ளது. இதன்வழி, உலகில் வெளியிடப்படும் சிறந்த தமிழ் நூலுக்குப் பத்தாயிரம் அமெரிக்க வெள்ளியைப் பரிசாக தேசிய நில நிதிக் கூட்டுறவு சங்கத்தினர் வழங்குகின்றனர்.

**தான்ஸ்ரீ டத்தோ கே.ஆர். சோமசுந்தரம்**

தான்ஸ்ரீ அவர்கள் திரு. கே.எஸ். இரத்தினசாமிப் பிள்ளை, திருமதி அன்னக்கிளி அம்மையாருக்கு 1930-ஆம் ஆண்டு மார்ச்சு திங்கள் 13-ஆம் நாள் தெலுக் இந்தான், பேராக்கில் பிறந்தார்.

தான்ஸ்ரீ சோமா அவர்கள் படிக்கின்ற காலத்திலேயே சமுதாயத்தைப் பற்றி அதிக அக்கறை கொண்டவராக விளங்கியவர். மேலும் அவர் இந்திய தேசிய இராணுவத்தில் ஈடுபாடு கொண்டதன் வழி மகாத்மா காந்தி, சுபாஷ் சந்திரபோஸ் இருவரின் கொள்கைகள் மற்றும் சிந்தனைகளால் பெரிதும் கவரப்பட்டு ஈர்ப்பு கொண்டவராகிறார். சூன் லீ தோட்டத்தில் உதவி குமாஸ்தாவாக பொறுப்பேற்றுக் கொண்ட பின்னர் அங்கிருந்தவர்களின் துணையுடன் பல்வேறு சமூகப்பணிகளையும் இவர் மேற்கொள்கிறார். அதில் ஒன்றுதான் கள்ளுக்கடை மறியல். கள் பிரியர்கள் கள்ளுக்கடைக்குச் செல்லும்போது சாலையில் படுத்து மறியல் செய்வதுண்டு. இச்செய்கைகள் தான்ஸ்ரீ சோமா அவர்கள் சமுதாயத்தின் மேல் உள்ள அக்கறையை வெளிப்படுத்துகின்றது.

1949-ஆம் ஆண்டு கூலிம் ம.இ.காவின் உறுப்பினரான பின்னர் அதன் செயலாளராக இவர் பதவி வகித்தபோது அங்கு ஒரு தமிழ்ப்பள்ளியைக் கட்டும் முயற்சியை மேற்கொண்டார். மேலும் மாணவர்களுக்கு கல்விநிதி, கலை, இலக்கிய நிகழ்ச்சிகள் நடத்த நிதி உதவி திரட்டி விளம்பரமின்றி உதவிகள் பல செய்துள்ளார் தான்ஸ்ரீ சோமா.

தான்ஸ்ரீ அவர்கள் 1949-ஆம்ஆண்டு தொடக்கம் அரசியலிலும் சமுதாயத்திலும் இடைவிடாத பணியை மேற்கொண்டு வருவதால் சமூகமும் அரசும் அவருக்கு பல்வேறு விருதுகள் வழங்கி கௌரவிதது வருகின்றன. சமாதான நீதிபதி, டத்தோ, தான்ஸ்ரீ முதலான பட்டங்கள் மலேசிய ஆட்சியாளர்களால் கொடுக்கப்பட்டு கௌரவிக்கப்பட்டுள்ளார். மேலும் 2002-இல் இந்தியாவில் ஹிந்த் ரத்தன் என்ற பட்டமும், 2007-ஆம் ஆண்டில் வெளிநாட்டு இந்தியர்களுக்கு வழங்கி வரும் சிறப்பு தலைமைத்துவத்துக் கான பிரவாசி பாரதிய சம்மான் விருதினை இந்திய அதிபர் டாக்டர் ஏ.பி.ஜே. அப்துல் கலாம் அவர்கள் மூலமும் பெற்று மலேசிய இந்தியர்களுக்கு பெருமை சேர்த்துள்ளார். இவர் அமைதியாக ஆற்றி வரும் கல்விச் சேவையினைப் பாராட்டி, ஆஸ்திரேலிய நாட்டின் நியூ காசல் பல்கலைக்கழகம் 2000 ஆம் ஆண்டில் கௌரவ டாக்டர் பட்டம் கொடுத்து கௌரவித்துள்ளது. இதற்கெல்லாம் மேலாக சமூகம் இவருக்கு கூட்டுறவுக் காவலர் என்ற பொருத்தமான பட்டத்தைக் கொடுத்து கொண்டாடி மகிழ்ந்தது.

# தேசிய நிலநிதிக் கூட்டுறவுச் சங்கம்
# தான்ஸ்ரீ கே.ஆர். சோமசுந்தரம் அறக்கட்டளை நடத்தும்
# "தான்ஸ்ரீ சோமா புத்தகப் பரிசு" நூல் தேர்வு விதிமுறைகள்

## 10,000 அமெரிக்க டாலர் (இந்திய ரூபாய் 5,00,000)

**1. நோக்கம்**

அனைத்துலக நாடுகளிலிருந்து படைக்கப்படும் நூல்களில் தமிழ்மொழிக்கும் இனத்துக்கும் மிகு பயன் விளைவிக்கும் சிறந்த நூலை ஈராண்டுகளுக்கு ஒரு முறை தெரிவு செய்து பரிசளித்தல்.

**2. பரிசின் பெயர்**

தான்ஸ்ரீ சோமா புத்தகப் பரிசு.

**3. பரிசுத் தொகை**

பத்தாயிரம் அமெரிக்க டாலர்.

**4. படைப்பு**

அ. துறை : எந்தத் துறை சார்ந்ததாகவும் இருக்கலாம்.

ஆ. மொழி : தமிழ்

இ. மொழித்தரம்: தமிழ்மொழியின் இலக்கணம், சொல்லாட்சி, மரபு ஆகிய கூறுகளில் தரமுடையதாக இருத்தல்.

ஈ. நூலின் பங்கேற்புத்தகுதி

i) சொந்தப் படைப்பாக இருத்தல் வேண்டும்.

ii) மொழி பெயர்ப்பாயின் சொந்தப் படைப்பின் மொழி பெயர்ப்பாக இருத்தல் வேண்டும்.

iii) தொகுப்பு நூலாயின் அனைத்தும் ஒருவரின் படைப்புகளாக இருத்தல் வேண்டும்.

iv) பலரின் படைப்புகளைக் கொண்ட தொகுப்பு பங்கேற்கத் தகுதி பெறாது.

v) கூட்டுப் படைப்பாயின் கூட்டுப் படைப்பாளர் அனைவரின் இசைவுக் கடிதங்களும் இணைக்கப்பட வேண்டும்.

vi) கூட்டுப் படைப்பாளர்களின் எண்ணிக்கை அதிகப்பட்சம் மூவருக்கும் கூடுதலாக இருத்தல் கூடாது.

vii) கல்வித் தகுதி கருதி உருவாக்கப்படும் ஆய்வேடு பங்கேற்புக்குத் தகுதி பெற மாட்டாது.

viii) வாழ்க்கை வரலாற்று நூல்களில் தன் வரலாற்று நூல் பங்கேற்புக்குத் தகுதி பெறாது.

ix) குறிப்பிட்ட நோக்கத்திற்காக இடு பணியாகச் செய்யப்படும் ஆய்வு சார்ந்த நூல்கள் பங்கேற்புக்குத் தகுதி பெற மாட்டாது.

x) குறிப்பிட்ட தேவைக்காக இடுபணியாக உருவாக்கப்படும் பாடநூல்கள், கல்வி வழிகாட்டி நூல்கள் போன்றவை பங்கேற்புக்குத் தகுதி பெற மாட்டாது.

xi) பொது நல நோக்கங்களுக்கு அப்பாற்பட்டவையாக, அறக்கட்டளையால் கணிக்கப்படும் நூல்கள் பங்கேற்புக்குத் தகுதி பெற மாட்டாது.

உ. நூலின் அமைப்பு : பதிப்புத்தரம் - ஏற்புடைய தரமுடையது.

ஊ. படைப்புத்திறன்: அந்தத் துறைக்குரிய கலைக்கூறுகள், மரபு, உத்திகள் ஆகியவற்றுடன் பண்பாட்டு வரம்புகளுக்கும் உட்பட்டதாக இருத்தல்.

எ. விளைபயன்: தமிழ் மொழிக்கும் இனத்திற்கும் கீழ்க்காணும் துறைகள் சார்ந்து மிகுபயன் விளைத்தல்:

அ) மொழி, இலக்கியம், கலை, பண்பாடு போன்றவை.

ஆ) கல்வி, அறிவியல், வாணிகம், தொழில், விளையாட்டுப் போன்றவை.

இ) மனித அகமேம்பாடு, வாழ்வியல் நெறி போன்றவை.

ஈ) இன்னோரன்ன மேம்பாட்டுக் கூறுகள்.

**5. படைப்பாளர்**

i) பங்கேற்கும் நூலுக்குரியவர் தனி மனிதராகவோ இயக்கமாகவோ இருக்கலாம்.

ii) அறக்கட்டளையின் பொறுப்பாளர்களும் பணியாளர்களும் அவர்தம் குடும்பத்தின் நேரடி உறுப்பினர்களும் பங்கேற்புக்குத் தகுதி பெற மாட்டார்கள்.

iii) குறிப்பிட்ட ஆய்வாண்டிற்குரிய நடுவர்களும், நடுவர்களது குடும்பங்களின் நேரடி உறுப்பினர்கள் பங்கேற்புக்குத் தகுதி பெற மாட்டார்கள்.

**6. பங்கேற்பு**

i) படைபாளரே நூலை அனுப்பி வைக்கலாம்.

ii) ஒருவர் எத்தனை படைப்புக்களையும் அனுப்பலாம்.

iii) பங்கேற்கும் ஒவ்வொரு நூலும் 3 படிகள் அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

iv) நூல்கள், அறிவிக்கப்பட்ட கால வரம்புக்குட்பட்ட முதற்பதிப்புகளாக இருத்தல் வேண்டும்.

v) ஒவ்வொரு பங்கேற்புக்கும், முறையாக நிறைவு செய்யப்பட்ட நுழைவுப் படிவம் இணைக்கப்படுதல் வேண்டும்.

vi) பங்கேற்புக்குரிய நுழைவுப் படிவத்தை அறக்கட்டளையின் அகப்பக்கத்திலிருந்து பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

vii) நூல்கள், அறிவிக்கப்பட்ட முடிவு நாளுக்குள் அறக்கட்டளை அலுவலகத்தை வந்தடைதல் வேண்டும்.

viii) நூல்கள் அனுப்பப்பட்டதற்கான சான்று, அவை வந்து சேர்ந்ததற்கான சான்றாகாது. முடிவு நாளுக்குள் வந்தடைந்த நூல்கள் மட்டுமே பங்கேற்புக்குத் தகுதி பெறும்.

ix) பதிப்பாளர்கள், அமைப்புகள், குடும்ப உறுப்பினர்கள், வாசகர்கள் ஆகியோரும் நூல்களைப் பரிந்துரைக்கலாம்.

அ) பரிந்துரைப்பவர், நூல்களையும் அனுப்ப வேண்டும்.

ஆ) பரிந்துரைப்பவர், படைப்பாளர் விவரங்களையும் இசைவுக் கடிதத்தையும் நூல்களுடன் இணைத்து அனுப்ப வேண்டும்.

x) பங்கேற்புக்கான நுழைவுப் படிவமும் நூல்களும் வந்தடைந்ததற்கான சான்றுக் கடிதம் பங்கேற்பாளருக்கு அனுப்பப்படும்.

xi) தெரிவு செய்யப்பட்டவர்க்கு மட்டுமே பரிசு முடிவு பற்றி அறிவிக்கப்படும்.

xii) அறக்கட்டளையின் அகப்பக்கத்திலும் பரிசு முடிவு பற்றி அறிவிக்கப்படும்.

## 7. பங்கேற்கும் நூல்களின் மதிப்பீடு

1. பங்கேற்கும் ஒவ்வொரு நூலும் அந்தத் துறைசார் வல்லுநர்கள் மூவர் கொண்ட நடுவர் குழுவால் ஆய்வு செய்யப்படும்.
2. பங்கேற்பு நூல்களின் துறை வகைப்பாட்டுக்கேற்ப தேவையான எண்ணிக்கையில் துறைசார் நடுவர் குழுக்கள் அமைக்கப்படும்.
3. துறைசார் நடுவர் குழுக்களின் முடிவுகள், அறக்கட்டளைப் பேராளர்களடங்கிய தெரிவுக் குழுவால் ஒருங்கிணைக்கப்பட்டு, பரிசுக்குரிய நூல் தெரிவு செய்யப்படும்.
4. பங்கேற்கும் ஒவ்வொரு நூலுக்கும் கீழ்காணும் மூன்று கோணங்களில் மதிப்பெண்கள் வழங்கப்படும்.

   அ. மொழித்தரம்: 4 ஆ&இ தரும் விளக்கத்தின் அடிப்படையில் மதிப்பிடப்படும்.

   ஆ. படைப்புத்திறன்: 4 ஈ தரும் விளக்கத்தின் அடிப்படையில் மதிப்பிடப்படும்.

   இ. விளைபயன்: 4 உ தரும் விளக்கத்தின் அடிப்படையில் மதிப்பிடப்படும்.

5. மதிப்பெண்கள்:

   * மொழித்தரம் : 25%
   * படைப்புத்திறன் : 25%
   * விளைபயன் : 50%

   அ. பரிசு பெறும் நூல் மொழித்தரம், படைப்புத்திறன் ஆகியவற்றுள் ஒவ்வொன்றிலும் குறைந்தது நூற்றுக்கு அறுபது (60/100) மதிப்பெண்கள் பெற்றிருக்க வேண்டும்; விளைபயனுக்கு நூற்றுக்கு எண்பது (80/100) மதிப்பெண்கள் பெற்றிருக்க வேண்டும்.

   ஆ. எந்த நூலுக்கும் ஆகக் குறைந்த மதிப்பெண்கள், இந்த விழுக்காட்டின்படி அமையாவிட்டால், அந்த ஆய்வாண்டில் பரிசு பெறும் நூல் பற்றி அறக்கட்டளை வாரியம் முடிவு செய்யும்.

## 8. பங்கேற்கும் நூல்களின் பதிப்புக்காலம்

அ. பரிசுக்கான ஆய்வும் தெரிவும் ஈராண்டுகளுக்கு ஒருமுறை நிகழும்.

ஆ. பரிசுக்கான ஆய்வாண்டுக்கு முந்திய ஈராண்டுகளில் பதிப்பிக்கப்பட்ட நூல்கள் மட்டுமே பங்கு பெறலாம்.

இ. ஆய்வாண்டின் ஜனவரியின் மத்திமத்தில் நூல்கள் பங்கேற்பு பற்றிய அறிவிப்பு வெளியிடப்படும்.

ஈ. ஆய்வாண்டின் ஜனவரி மத்திமத்தில் தொடங்கி ஏப்ரல் 16 ஆம் நாள் வரை பங்கேற்புக்கான நூல்கள் ஏற்றுக் கொள்ளப்படும்.

உ. ஆய்வாண்டின் இறுதிக்குள் பரிசு முடிவு, பரிசளிப்பு நாள், இடம் ஆகியவை அறிவிக்கப்படும்.

ஊ. ஆய்வாண்டின் இறுதிக்குள் முறையான பரிசளிப்பும் நடைபெறும்.

## 9. நடுவர்கள்

அ. பங்கேற்புக்கு வந்திருக்கும் நூல்கள் துறை பிரிக்கப்பட்டு, ஒவ்வொரு துறைக்கும் ஒரு நடுவர் குழு அமைக்கப்படும்.

ஆ. ஒவ்வொரு நடுவர் குழுவிலும் மூவர் இடம் பெற்றிருப்பர்.

இ. நடுவர் மூவருள் ஒவ்வொருவரும் (74 அ, ஆ, இ) மூன்று மதிப்பீட்டுக் கூறுகளுள் ஒன்றில் வல்லுநராக இருப்பர்.

ஈ. நடுவர் குழு உறுப்பினர்கள் அறக்கட்டளை வாரியத்தால் நியமிக்கப்படுவர்.

உ. நடுவர்கள், நாட்டு வரம்புகளுக்கு அப்பால் துறைத்திறன் சார்ந்து நியமிக்கப்படுவர்.

**10. பரிசளிப்பு**

அ. பரிசளிப்பு விழாவில், தேசிய நிலநிதி கூட்டறவு சங்கத் தலைவர் / தான்ஸ்ரீ சோமா அறக்கட்டளைத் தலைவர் அல்லது அறவாரியம் முடிவு செய்யும் ஒரு பிரமுகர் பரிசினை வழங்குவார்.

ஆ. தெரிவு பெறுபவருக்குப் பணமாக 10,000 அமெரிக்க டாலர் வழங்கப்படும்.

இ. பதக்கமும் / நினைவுச் சின்னமும் சான்றிதழும் வழங்கப்படும்.

ஈ. பரிசு பெறுபவருக்கும் அவரது குடும்ப உறுப்பினர் / முறையான உதவியாளர் ஒருவருக்கும் பரிசளிப்பு நிகழும் இடத்திற்கு இரு வழி வானூர்திப் போக்குவரத்தும் தங்குமிட வசதியும் வழங்கப்படும்.

உ. பரிசு பெறுவோர் கூட்டுப்படைப்பாளர்களாயின் வானூர்திப் போக்குவரத்தும் தங்குமிடமும் படைப்பாளர்களுக்கு மட்டுமே வழங்கப்படும்; குடும்ப உறுப்பினர்களுக்கு / உதவியாளர்களுக்கு வழங்கப்பட மாட்டாது.

ஊ. பரிசு பெறுபவர் பரிசளிப்பு நிகழ்ச்சியில் / விருந்தில் தமது படைப்பைப் பற்றி உரை நிகழ்த்த வாய்ப்பளிக்கப்படலாம்.

எ. பரிசு முடிவு செய்யப்பட்டபின் நூலுக்குரியவரோ அவரை பிரதிநிதிக்கும் சட்ட ரீதியான வாரிசோ அப்பரிசினைப் பெறத் தகுதியுடையவராவார்.

**11. பரிசு பற்றிய கருத்துரைகள்**

அ. இப்பரிசு பற்றி நடுவர்களின் முடிவே இறுதியானது. இந்த முடிவு குறித்து கடித பரிமாற்றமிருக்காது.

ஆ. ஆக்கமான கருத்துகள் அறக்கட்டளைக்கு எழுத்து வழிமுறையாகத் தெரிவிக்கப்படலாம்.

**12. விதிகளும் விளக்கமும் மாற்றமும்**

அ. விளக்கம்:

இந்த நிலை விதிகளில் நேரடியாகக் குறிப்பிடப்படாத அல்லது போதிய விளக்கமளிக்கப்படாத சூழல் அல்லது சிக்கல் தோன்றும் நிலையில், அதுபற்றி அறக்கட்டளை வாரியம் எடுக்கும் நிலைப்பாடே இறுதியானது.

ஆ. மாற்றம்:

i) தேவையென்று கருதப்படும்போது, இந்த நிலை விதிகளில் புதியவற்றறைச் சேர்க்கவோ, இருக்கும் ஒன்றைத் திருத்தவோ, நீதிக்கவோ அறக்கட்டளை வாரியத்துக்கு உரிமையுண்டு.

ii) எனினும், அறக்கட்டளை வாரியத்தால் குறைந்தபட்சம் மூவரைக் கொண்டு அமைக்கப்படும் பணிக்குழுவின் ஆய்வுக்கும் பரிந்துரைக்கும் ஏற்பவே மேற்கண்ட மாற்றங்கள் செய்யப்படும்.

**13. அறக்கட்டளை முகவரி / நூல் அனுப்பப்பட வேண்டிய முகவரி:**

தான்ஸ்ரீ கே.ஆர்.சோமசுந்தரம் அறக்கட்டளை
'தான்ஸ்ரீ சோமா புத்தகப் பரிசு'
Level 10, Wisma Tun Sambanthan,
Jalan Sultan Sulaiman, 50000, Kuala Lumpur,
Malaysia.

மலேசியத் தொடர்புக்கு:

இணை பேராசிரியர் டாக்டர் கிருஷ்ணன் மணியம்
Department of Indian Studies
University of Malaya
50630 Kuala Lumbur, Malaysia.
Email: krishanan@um.edu.my

**14. உலகளாவியத் தொடர்புக்கு:**

1. தமிழகம்: திரு. நந்தன் மாசிலாமணி
கலைஞன் பதிப்பகம்
Anuragam
19, Kannadhasan Salai
T.Nagar, Chennai - 600 017.

2. இலங்கை : திருமதி. சாந்தி திருநாவுக்கரசன்
Department of Hindu Religious and Cultural Affairs
248-1/1 Galle Road, Colombo 04, Sri Lanka.

பேராசிரியர் நுஃமான்
University of Pradeanya, Candy,
Sri Lanka.

3. சிங்கப்பூர்: திருமதி புஷ்பலதா நாயுடு
National Library Board
100 Victoria Street
# 14-01 National Library Building, Singapore 188064

4. கனடா: இணைப் பேராசிரியர் ஆர்.சேரன்
401 Sunset Avenue, Windsor, Ontario
Canada N9B 3P4.

பேராசிரியர் செல்வகனக நாயகம்
6 Hoskin Ave, Toronto, Ontario,
Canada M5S 1H8.

5. பிரான்ஸ்: நாகலட்சுமி சிவசம்பூ
27 rue Jean Moulin, 92400 Courbevoie,
France.

●

தேசிய நிலநிதிக் கூட்டுறவுச் சங்கம்
தான்ஸ்ரீ கே.ஆர். சோமசுந்தரம் அறக்கட்டளை நடத்தும்

# "தான்ஸ்ரீ சோமா புத்தகப் பரிசு"

புகைப்படம்

## நூல் தேர்வு நுழைவுப் படிவம்

1. பெயர் : ........................................................................................................
2. அடையாள எண் / கடவுச்சீட்டு எண் : ........................................................................................................
3. முகவரி : ........................................................................................................
   ........................................................................................................
4. மின் அஞ்சல் முகவரி : ........................................................................................................
5. தொழில் : ........................................................................................................
6. எழுத்துத்துறை அனுபவம்/ஆண்டு : ........................................................................................................
7. நூலின் பெயர் : ........................................................................................................
8. நூலின் பதிப்பாண்டு : ........................................................................................................
9. நூலின் பதிப்பாளர் : ........................................................................................................

இதன் வழி மேற்கொடுக்கப்பட்டுள்ள விவரங்கள் உண்மையானவை என்பதையும், அனுப்பப்பட்ட நூல் என்னால் எழுதப்பட்டது என்பதையும் உறுதியளிக்கிறேன்.

எழுத்தாளர் கையொப்பம்